**20.03.2023. அ.வ.எண். 88 /2018 வா.சா.1 – திரு. இராமநாதன்.**

**<u>1, 2, 3, 4, 5, 6 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

**தாவா பிராது, நிருபண வாக்குமூலம், வழக்கறிஞர் அறிவிப்பு ஆகியவை நான் மட்டும் வக்கிலுக்கு தகவல் சொல்லிதான் தாக்கல் செய்யப்பட்டது. அதில் உள்ள விபரங்கள் எனக்கு நன்றாக தெரியும். மொத்த எட்டு இலக்க சொத்துக்களுக்கு பாகம் கேட்டு வழக்கு தாக்கல் செய்திருந்தேன். எட்டு இலக்க சொத்துக்களுக்கும் சர்வே நம்பர், நான்குமால், விஸ்தீரணம் தெரியுமா என்றால் தெரியும். வழக்கு சொத்துக்களுக்கு சர்வே எண் கேட்டால் எனக்கு சொல்லத்தெரியும். வழக்கு சொத்தில் கண்டுள்ள வீடுகளின் கதவு எண் தற்போது ஞாபகம் இல்லை. நான் பத்தாம் வகுப்புவரை படித்துள்ளேன். என்னுடைய பிராதில் 6வது பத்தியில் பூர்விக சொத்துக்களில் வந்த வருமானத்தை வைத்து தாவா சொத்து மற்றும் பிற சொத்துக்களை 1ம் பிரதிவாதி கல்யாணி மற்றும் உபய வாதிகளின் பெயரில் தனித்தனியே கிரையம் வாங்கப்பட்டு பொதுவாக அனுபவம் செய்து வந்தார்கள் என்று நான் சொல்லியிருந்தால் சரியல்ல. நான் தற்போது ரியல் எஸ்டேட் தொழில் செய்து வருகிறேன். வா.சா.ஆ.8 வழக்கறிஞர் அறிவிப்பு தாவா வழக்கில் கண்ட 1ம் பிரதிவாதி மற்றும் 5, 6 பிரதிவாதிகளுக்கு நான் அனுப்பவில்லை. அதற்கான காரணம் எனக்கு தெரியவில்லை. வா.சா.ஆ.8 அறிவிப்பில் நான் மொத்தம் 12 இலக்க சொத்துக்களுக்கு பாகம் கேட்டு வழக்கறிஞர் அறிவிப்பு 2 முதல் 4 பிரதிவாதிகளுக்கு அனுப்பினேன். 12 இலக்க சொத்துக்களுக்க வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பிவிட்டு, 8 இலக்க சொத்துக்களுக்கு வழக்கு போடுவதற்கான காரணம் பற்றி எனக்கு தெரியாது. பிராதில் காணாத சொத்துக்களுக்கு ஏற்கனவே பாகம்பிரிந்த காரணத்தினால் அந்த சொத்துக்களை வழக்கில் சேர்க்கவில்லை. எனது பிராதில் 8வது பத்தியில் கண்டவாறு 05.01.2012ம் தேதி நான் மற்றும் 2 மற்றும் 4 பிரதிவாதிகளும் சேர்ந்து பாகபாத்திய ஆதரவு எழுதப்பட்டது என்று சொன்னால் உண்மைதான். அதில் நான்கு பிரதிகள் எழுதப்பட்டது. அதில் நான் கையெழுத்து போட்டுள்ளேன். வேறு யார் கையெழுத்து போட்டார்கள் என்று எனக்கு தெரியாது.**

எனக்கு கொடுக்கப்பட்ட அசல் பிரதியை நீதிமன்றம் கட்டளையிட்டால் நான் தாக்கல் செய்கிறேன். என்னிடம் ஒரு காப்பி கொடுத்தார்கள், மீதி மூன்று காப்பியை யாரிடம் கொடுத்தார்கள் என்று எனக்கு தெரியாது. 05.01.2012 ஆவணத்தில் 1வது கையெழுத்து போடப்பட்டுள்ளதாக சொல்லப்படும் நபர் கல்யாணி என் அம்மா. என் அம்மா வழக்கிற்கு முன்பு இறந்துவிட்டார். அதில் கையெழுதிட்டுள்ள மற்ற நபர்கள் எனது நெருங்கிய உறவினர்கள், பங்காளிகள். அவர்கள் என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் கையெழுதிட்டார்களா என்று எனக்கு தெரியாது. இதே போல் என்னிடம் கொடுக்கப்பட்ட பிரதியை பார்த்து சொல்லமுடியும். மேற்படி ஆவணம் கட்டாயத்தின் பேரில் எழுதப்பட்டது. அந்த விபரத்தை எனது பிராதிலோ, வழக்கறிஞர் அறிவிப்பிலோ சொல்லவில்லை. மேற்படி ஆவணம் கட்டாயப்படுத்தி வாங்கியதாக வழக்கிற்காக சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. மேற்படி ஆவணத்தில் சாட்சி கையெழுத்து போட்ட நபர்களுடன் நல்ல இணக்கமாகத்தான் உள்ளேன். விரோதம் கிடையாது. அந்த 05.02.2012 ஆவணத்தில் எனக்கும், 2 முதல் 4 பிரதிவாதிகளுக்கும் பாகம் ஒதுக்கப்பட்டு, தனித்தனியாக அட்டவணை போட்டு எழுதப்பட்டுள்ளது. எனக்கு ஒதுக்கபட்டுள்ள **"டி"** செட்டில்யூலில் 1வது இலக்கமாக நித்தியானந்தம் கார்ப்பரேசன் மதிப்பு ரூ. 7,24,854.10 என்று கண்டுள்ளது. அது போக மொத்தம் 10 அயிட்டங்கள் காண்பிக்கப்பட்டுள்ளது. இந்த விபரங்களை என்னுடைய வழக்கில் நான் சொல்லவில்லை. மேற்கண்ட ஆவணத்தில் எனக்கு ஒதுக்கப்பட்ட சொத்துக்கள் அனைத்தும் பொதுகுடும்ப சொத்துக்கள்தான். ஆனால் அந்த சொத்துக்களை வழக்கில் சேர்க்கவில்லை என்று சொன்னால் அந்த மாதிரி சொத்துக்கள் இல்லை. 05.01.2012ல் கண்ட சொத்துக்களில் எத்தனை சொத்துக்கள் பொது குடும்ப சொத்து என்று எனக்கு கொடுக்கப்பட்ட பிரதியை பார்த்துதான் சொல்லமுடியும். 18.08.2003ல் எனக்கும், பிரதிவாதிகளுக்கும் பாத்தியப்பட்ட பொதுசொத்துக்கள் தனித்தனியே அனுபவம் செய்து வருகிறார்கள் என்று சொன்னால் சரியல்ல. அந்த ஆவணத்தில் சொத்துக்கள் கண்டுள்ளது. எனக்கு ஒதுக்கப்பட்ட சொத்துக்களை தவிர்த்து பொய்யாக வழக்கு போட்டதால் 05.01.2012 ஆவணத்தை

பற்றி முன்னுக்கு பின் முரணாக பதில் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. பாகனேரியில்

உள்ள வீட்டின் கதவு எண். 286. அது பொது வீடுதான். எனக்கும், பிரதிவாதிகளுக்கும் எந்த பிரச்சினையும் இல்லை. வா.சா.ஆ.2. ஆவணத்தில் மொத்தம் 14 இலக்க சொத்துக்கள் கண்டுள்ளது. ஆனால் என்னுடைய பிராதில் அதில் கண்ட 8 இலக்க சொத்துக்களில் மட்டும் பாகம் கேட்டு தாக்கல் செய்துள்ளேன். மீத சொத்துக்களை 5, 6 பிரதிவாதிகளுக்கு திருமணத்தின் போது சீதனமாக கொடுத்ததால் வழக்கில் அதனை நான் சேர்க்கவில்லை. பிராதில் சொல்லியுள்ளேன். என்னென்ன சொத்துக்கள் கொடுக்கப்பட்டது என்று குறிப்பிட்டு சொல்லவில்லை. 5, 6 பிரதிவாதிகள் என் தங்கைகள். அவர்களுடன் நான் தற்போது இரண்டு வருட காலமாக நேசமாக இல்லை. அதற்கு முன்பு நேசமாக இருந்தேன். என் தங்கை மகன் திருமணம் விசயமாக எங்களுடன் கருத்து வேறுபாடு இருந்து வந்தது. 6ம் பிரதிவாதி மற்ற 2 முதல் 4 பிரதிவாதிகளுடன் சேர்ந்து கொண்டுள்ளார். வழக்கில் 1ம் பிரதிவாதி வழக்கிற்கு முன்னால் என்னோடுதான் இருந்தார் என்று சொன்னால் சரியல்ல. 2 முதல் 6 பிரதிவாதிகளுடன் 1ம் பிரதிவாதி ஆரம்ப காலம் முதல் இருந்து வந்தார் என்று சொன்னால் சரியல்ல. 1ம் பிரதிவாதி 18.12.2020ம் தேதி இறந்துவிட்டார். அந்த இறப்பில் நான் ஒழுங்காக கலந்துகொள்ளவில்லை என்று சொன்னால் சரியல்ல. 05.01.2012 ஆவணத்தில் 1வது சாட்சி கையெழுத்து கல்யாணி என்று உள்ளது. அதில் கல்யாணிதான் கையெழுத்து போட்டுள்ளார் என்று மற்ற சாட்சிகளை கேட்டால்தான் தெரியும், எனக்கு தெரியாது. பிராதில் 8வது இலக்கமாக காட்டப்பட்டுள்ள எப்.டி. சம்பந்தமான ஆவணத்தை இதுவரை தாக்கல் செய்யவில்லை. வேண்டுமென்றால் தாக்கல் செய்கிறேன். 5, 6 பிரதிவாதிகளுக்கு சேர்த்துதான் நான் பாகம் கேட்டேன் என்று பிராதில் சொல்லியுள்ளது தவறு என்றால் சரியல்ல. 05.01.2012 ஆவணம் நடைமுறைக்கு வரவில்லை என்று நான் பொய்யாக சொல்லிகிறேன் என்றால் சரியல்ல. மேற்கண்ட ஆவணம் நடைமுறைக்கு வந்து பொது குடும்ப சொத்துக்கள் அனைத்தும், தனித்தனியாக பாகம் பிரிக்கப்பட்டு அவர்அவர்கள்

தனித்தனியே அனுபவம் செய்து வருகிறார்கள் என்று சொன்னால் சரியல்ல. பிராது சொத்து விபரத்தில் கண்டுள்ள 4ம் இலக்க சொத்தில் பட்டா நம்பர் 521, சர்வே நம்பர். 440/2ல் புதிதாக வீடுகட்டியுள்ளார்கள். யார் கட்டிடம் கட்டியுள்ளார்கள் என்று தெரியாது. பிரதிவாதிகள் நான்கு பேர் இருப்பதால், அதில் குறிப்பிட்டு யார் கட்டியுள்ளார் என்று தெரியாது. பிராது 4ம் இலக்க சொத்தில் 2ம் பிரதிவாதிக்கு பாகம் ஒதுக்கப்பட்டு அதிலிருந்து பழைய கட்டிடத்தை இடித்துவிட்டு புதிதாக ஊராட்சிமன்றத்தில் அனுமதி பெற்று வீடுகட்டி அவர்தான் குடியிருந்துவருகிறார் என்று சொன்னால் சரியல்ல. 5ம் இலக்க சொத்தில் மனைகட்டிடம் மற்றும் அதனை ஒட்டியுள்ள காலியிடம் எனக்கு பாகப்பிரிவினை செய்யப்பட்டு அவர்அவர்கள் அனுபவித்து வருகிறோம் என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.4, 5 ஆவணங்கள் உரிய அதிகாரியிடமிருந்து பெறப்படாததால் ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல என்று சொன்னால் சரியல்ல. பிராதில் நான் தாவா சொத்துகளில் 1/7 பாகம் கேட்டுள்ளேன். எனது அம்மா இறந்த பின்பு 1/6 பாகம் என்று கேட்டுள்ளேன். பிராதில் நான் திருத்தம் செய்யவில்லை. நான் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பிற்கு 2 முதல் 4 பிரதிவாதிகள் தனித்தனியாக பதில் அறிவிப்பு அனுப்பினார்கள். அந்த பதில் அறிவிப்பில் சில சொத்துக்கள் பொது குடும்ப சொத்துக்கள் இல்லை என்று சொன்னததினால் அது பற்றி எனது வழக்கறிஞருக்கு தெரியும். பிராதில் கண்டுள்ள சொத்துக்களில் 1ம் இலக்கமான பட்டா எண். 252ல் வரிசை எண். 1 முதல் 3 இலக்க சொத்துக்களான சர்வே எண். 125/2, 125/4, 238/3, 2வது இலக்க சொத்துகளான பட்டா எண். 710ல் வரிசை எண். 7ல் கண்டுள்ள புல எண். 155/2018 வரிசை எண். 10ல் கண்டுள்ள புல 245/10ஏ, வரிசை எண். 20ல் கண்டுள்ள புல எண். 48/7, வரிசை எண் 21ல் கண்டுள்ள புல 61/2 பி, அதே போல் 4து இலக்கமாக கண்டுள்ள பட்டா எண். 521ன் புல 440/2ல் உள்ள ஓட்டு வீடு தாவா பிராதில் 6வது இலக்கமாக கண்டுள்ள புல எண். 127/2, 127/3, 127/6, 127/7 மற்றும் 7 வது இலக்க மாக கண்டுள்ள பட்டா எண்.231ல் கண்டள்ள புல எண். 127/8 ஆகிய

சொத்துக்களும் மற்றும் பிராதில் காணாத பிற சொத்துக்களும் வாய்மொழி பாகப்படியும், பாக விஸ்தீ பத்திரப்படியும், 2வது பிரதிவாதிக்கு ஒதுக்கப்பட்டு அவர் தனித்து பாத்தியமடைந்து வரி செலுத்தி தனியாக அனுபவித்து வருகிறார் என்று சொன்னால் சரியல்ல.